தனி அலுவலர், தையூர் ஊராட்சி / வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ), திருப்போரூர் அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை - திரு.எம்.வெங்கட்ராகவன்.

ந.க.எண்.2449/2020/ஆ1.

நாள். .05.2021

பொருள் - மனைப்பிரிவு - திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம் - தையூர் ஊராட்சி மற்றும் கிராமம் Mr.Vikram Seshasayee & Asha Natarajan என்பவரின் சர்வே எண். 1527&1528/1-ல் 14.90 ஏக்கர் பரப்பில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது - திட்ட அனுமதி அளித்து உத்தரவிடுதல் - சார்ந்து.

பார்வை - 1.துணை இயக்குநர் (பொ) / உறுப்பினர் செயலர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், செங்கல்பட்டு அவர்களின் ந.க.எண்.1338/2021/மாஉதிகு (செ.மா-3) நாள்.23.04.2021.
2.நகர் ஊரமைப்பு இயக்குநர்(முகூபொ), சென்னை அவர்களின் கடித ந.க.எண்.4798/2020/TCP-5 நாள்.17.09.2020.
3.மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர், மண்டலம்-1-ன் கள ஆய்வு அறிக்கை நாள்.27.08.2020.
4.தானபத்திரம் எண்.2409/2021. நாள்.12.02.2021.
5.இதே எண்ணிட்ட இவ்வலுவலக கடித நாள்.04.05.2021.
6.தையூர் ஊராட்சி மன்றத்தீர்மானம் எண்.109 நாள்.17.02.2021. பலவகை வரவு ரசீது எண்.1588 நாள்.04.05.2021.

*********

<u>உத்திரவு</u>

பார்வை 1-ல் காணும் துணை இயக்குநர் (பொ) / உறுப்பினர் செயலர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், செங்கல்பட்டு அவர்களின் நடவடிக்கைகளின்படி, திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம், தையூர் ஊராட்சி மற்றும் கிராமம் Mr.Vikram Seshasayee & Asha Natarajan என்பவரின் சர்வே எண். 1527&1528/1-ல் 14.90 ஏக்கர் பரப்பில் மனைப்பிரிவு வரைபடத்திற்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பார்வை 2-ல் காணும் நகர் ஊரமைப்பு இயக்குநர்(முகூபொ), சென்னை அவர்களின் கடிதத்தின்படி, மேற்படி மனைப்பிரிவிற்கு அனுமதி வழங்கும்பொருட்டு, மனைப்பிரிவில் உள்ள பொது உபயோகம், பூங்கா, TNEB. சாலை மற்றும் மூலைமுடுக்கு இடம் ஆகியவை உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்ய தெரிவிக்கப்பட்டு, பார்வை 3-ல் காணும் மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர், மண்டலம்-1-ன் கள ஆய்வு அறிக்கையின்படி, பார்வை 4-ல் காணும் தானபத்திரத்தின்படி, ஊராட்சிக்கு பொது உபயோகம், பூங்கா, TNEB. சாலை மற்றும் மூலைமுடுக்கு ஆகியவை சேர்த்து 24940.67 Sq.m பரப்பு நிலம் ஊராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, பார்வை 5-ல் காணும் இவ்வலுவலக கடிதத்தின்படி, வளர்ச்சிக்கட்டணம் ரூ.3,21,000/- (ரூபாய் மூன்று இலட்சத்து இருபத்தோராயிரத்து மட்டும்) ஊராட்சியில் செலுத்தியமைக்கான பலவகை வரவு ரசீது எண்.1588 நாள்.04.05.2021 மற்றும் கீழ்காணும் நிபந்தனைகளின் அடிப்படையில் இம்மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

## நிபந்தனைகள்

1) நகர் ஊரமைப்பு துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி மற்றும் திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி மற்றும் திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானபத்திரம் பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. எனவே நில உரிமை சான்றுகள் தவறென கண்டறியப்பட்டால் இவ்வுத்தரவு இரத்தானதாக கருதப்படும்.

2) மேற்படி மனைப்பிரிவில் தானபத்திரம் மூலம் பெறப்பட்ட பகுதிகளில் சாலைகள், குடிநீர், தெருவிளக்குகள் மற்றம் வடிகால் வசதிகள் மனுதாரரே சொந்த செலவில் அமைத்து தர வேண்டும்.

3) எந்த ஒரு அடிப்படை வசதிக்கான கட்டமைப்பு பணி முடிவுற்ற பின்னர் இவ்வொன்றிய பொறியாளரிடம் அதற்கான தரச்சான்று பெற வேண்டும்.

4) சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ண்பபதாரருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். மேலும், அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ள வேண்டும்.

5) மனைப்பிரிவில் அமையும் ஒப்படைப்பு செய்யப்பட்ட சாலைகளை தடை செய்யாமல் புழக்க சாலைகளாக நிலைநிறுத்தப்பட வேண்டும்.

6) மனைப்பிரிவு சிறப்பு நிபந்தனைகளான 19 (இ) மற்றும் 19(உ) குறித்து ஏதேனும் வழக்கு தொடரப்பட்டால் இச்செயல்முறை இரத்து செய்யப்பட்டதாக கருதப்படும்.

7) இம்மனைப்பிரிவு தொடர்பாக பார்வை 1-ல் குறிப்பிடப்பட்டுள்ள 1 முதல் 26 வரையிலான நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகள் அனைத்தும் நிறைவேற்றப்படவேண்டும். நிபந்தனைகள் மீறும் வகையில் இம்மனைப்பிரிவு நிலஉரிமை குறித்து ஏதேனும் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டால் இச்செயல்முறை இரத்து செய்யப்பட்டதாக கருதப்படும்.

8) இம்மனைப்பிரிவில் கட்டணங்கள் தொடர்பாக ஏதேனும் தணிக்கைத்தடை ஏற்படின், அதற்கான இழப்பீட்டுத் தொகையை மனுதாரரிடமிருந்து வசூலிக்கப்படும்.

4/5/19

தனி அலுவலர், தையூர் ஊராட்சி /
வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ)
திருப்போரூர்.

பெறுநர்

Mr.Vikram Seshasayee & Asha Natarajan
No.49/29, First Cross Street,
Kasturibai Nagar, Adayar, Chennai.

நகல் - ஊராட்சி செயலர், தையூர் ஊராட்சி, திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம்.

Vikram Seshasayee.

பதிவு அஞ்சல் மூலம்

# நகர் ஊரமைப்புத் துறை

அனுப்புநர்
திரு.பா.கணேசன் இ.ஆ.ப.,
நகர் ஊரமைப்பு இயக்குநர்,
2வது, 3வது மற்றும் 4வது தளம்,
சிஎம்டிஏ வளாகம்,
ஈ & சி மார்க்கெட் சாலை,
கோயம்பேடு, சென்னை - 600 107.

பெறுநர்
துணை இயக்குநர் (பொ) / உறுப்பினர் செயலர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
செங்கல்பட்டு மாவட்டம்.

ந.க.எண்.4798 / 2020 / TCP-5 , நாள்.18.03.2021

அய்யா,

பொருள்: மனைப்பிரிவு - நகர் ஊரமைப்பு இயக்குநர் அலுவலகம், சென்னை-107 செங்கல்பட்டு மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் வட்டம் / ஊராட்சி ஒன்றியம், தையூர் ஊராட்சி, தையூர் 'ஆ' கிராமம், நில அளவை எண்கள்.1527 மற்றும் 1528/1-ல் 14.90 ஏக்கர் பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கான அனுமதி / இசைவு - ஒப்புதல் வழங்குதல் - குறித்து.

பார்வை:
1. மனுதாரர் Mr.Vikram Seshasayee & Asha Natarajan அவர்கள் கடிதம், நாள்.10.02.2020, 02.09.2020 மற்றும் 05.03.2021.
2. மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், செங்கல்பட்டு மாவட்டம், ந.க.எண்.195/2020/மாஉதிகு, நாள்.27.02.2020.
3. நகர் ஊரமைப்பு இயக்குநர் கடிதம், ந.க.எண்.4798/2020/TCP-5, நாள்.17.09.2020. ஒப்புதலளிக்கப்பட்டது.
4. தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.) அவர்கள் கடிதம் ந.க.எண்.2449/2020/ஆ1, நாள்.17.02.2021.
5. இவ்வலுவலக சுற்றறிக்கை ந.க.எண்.40483/2020/எல்ஏ1, நாள்.07.11.1992.
6. நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.7978/2012/எல்ஏ2, நாள்.19.04.2012.
7. நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.13686/2007/எல்ஏ1, நாள்.08.09.2017.
8. நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.2201/2017/சிபி, நாள்.28.09.2017.
9. அரசாணை எண்.138, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள்.04.06.2004.
10. அரசாணை எண்.79, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள்.04.05.2017.

2..

11. அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.04.02.2019 மற்றும் அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.31.01.2020.
12. அரசாணை எண்.141, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறைUD4(3), நாள்.23.09.2020.
13. அரசு கடிதம் எண்.19113/நவ4(3)/2017-1, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள்.30.08.2017.
14. நகர் ஊரமைப்பு ஆணையாளர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.13686/2017/LA1, நாள்.08.09.2017.
15. அரசாணை (2டி)எண்.19, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி(ந.வ4(1))த்துறை, நாள்.09.01.2020.

-----

பார்வை 1 மற்றும் 2-ல் சுட்டிய கடிதத்துடன் பெறப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவு இசைவுக்கான கோரிக்கை, பரிசீலிக்கப்பட்டு, பார்வை 3-ல் சுட்டிய இவ்வலுவலக கடிதம் நாள்.17.09.2020 மூலம் மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடம் இசைவு வழங்கப்பட்டது. பார்வை 4-ல் சுட்டிய கடிதம் மூலம் சாலை மற்றும் பொது ஒதுக்கீடுகளை உள்ளாட்சியிடம் தானமாக, தானப்பத்திரம் எண்.2409/2021, நாள்.12.02.2021-ல் ஒப்படைக்கப்பட்டு பிழை திருத்தல் பத்திரம் ஆவண எண்.3816/2021, நாள்.01.03.2021 ஆகியவைகளின் நகல் பெறப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து உத்தேச மனைப்பிரிவுக்கு கீழ்க்கண்ட ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

<u>இணைப்பு:</u>
வரைபடம் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள்
(4 தொகுப்பு)

(ஒம்/-) பா. கணேசன்,
நகர்ஊரமைப்பு இயக்குநர்

<u>நகல்:</u>

1. தனி அலுவலர் / தையூர் ஊராட்சி
   வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ),
   திருப்போரூர். (பத்தி ஒன்று மட்டும்)

2. மனுதாரர்
   திரு.விக்ரம் சேஷசாயி மற்றும் ஆஷா நடராஜன்,
   நெ.26, புது கடற்கரை சாலை விரிவு,
   திருவள்ளுவர் நகர் கடற்கரை,
   திருவான்மியூர், சென்னை-600 041. (பத்தி ஒன்று மட்டும்)

3. இருப்பு கோப்பு (வரைபடம்-1 மற்றும் நிபந்தனைகள் படிவம்-1)

4. கோப்பு (வரைபடம்-1 மற்றும் நிபந்தனைகள் படிவம்-1)

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

19/03/21
நகர் ஊரமைப்பு இணை இயக்குநர்.